**தொடன்கொட பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 யூன் 30 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 செப்தெம்பர் 23 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தொடன்கொட பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 67 காணி கட்டிடங்களின் கிரயம் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படாதிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட நீர் தாங்கி மூலதனமாக்கப்படவில்லை. | சொத்துக்கள் மூலதனமாக்கப்பட வேண்டும். | மதிப்பீட்டாளரை வருவித்து காணி கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்படுகின்றது. 2019 ஆம் ஆண்டின் கணக்குகளில் சரி செய்யப்படும். |
| (ii) | புற நெகும செயற்திட்டத்தின் கீழ் அலுவலகம் மற்றும் வாராந்த சந்தை நிர்மாணிக்கும் கிரயத்தில் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) ரூபா 4,256,317 தொகை கணக்கீடு செய்யப்பட்டமையால் நிதிக் கூற்றுக்களில் காணி கட்டிடங்களின் கிரயம் அப்பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டது. | வரித் தொகை சொத்துக்களின் கிரயத்தில் நீக்கப்பட்டு கணக்கு வைக்கப்படவேண்டும். | 2019 ஆம் ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது வரித் தொகை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | சோபித்தகம நூலகத்தில் காணப்படுகின்ற நூலக புத்தக இருப்பு ரூபா 134,811 தொகை குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | குறைவாக பதியப்பட்ட நூலக புத்தக இருப்பு மூலதனமாக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது இறுதிக் கணக்கில் சரி செய்யப்படும். |
| (iv) | வருடாந்த பொருள் மெய்மெய்யாய்வில் இனங்காணப்பட்ட களஞ்சியம் மற்றும் பொதுக்களஞ்சியம் இருப்புக்கள் முறையே ரூபா 124,028 தொகை மற்றும் ரூபா 18,500 தொகை என்பவற்றிக்குறிய இருப்புக் கணக்குகளில் மற்றும் திரண்ட நிதியக்கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | திரண்ட நிதியத்தில் வரவு வைத்தல் சரி செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது சரி செய்யப்படும். |
| (v) | மீளாய்வாண்டில் 08 மூலதன சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்டதனால் கிடைத்த ரூபா 1,713,566 தொகை நானாவித வருமான வைப்புக்கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. மேலும் மேற்கூறப்பட்ட 04 சொத்துக்களின் கிரயமான ரூபா 2,843,550 தொகை உரிய சொத்துக்கள் மற்றும் மூலதன பங்களிப்புக் கணக்கிலிருந்து அகற்றப்படவில்லை. | சொத்து விற்பனையின் வருமானம், வைப்புக் கணக்குகளிலும் கிரயம் சொத்துக் கணக்கிலிருந்தும் அகற்றப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது சரி செய்யப்படும். |
| (vi) | 2018 ஆம் ஆண்டில் ஆதனங்கள் மற்றும் மரங்கள் ஏல விற்பனையில் கிடைத்த ரூபா 2,021,291 தொகையான 01 சதவீத வரி வருமானம் நானாவித வைப்புக்கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | ஆண்டின் வருமானமாக நிதிக் கூற்றுக்களில் பதியப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது இறுதிக் கணக்கில் சரி செய்யப்படும். |
| (vii) | மீளாய்வாண்டிற்குறிய மூலதன உதவி ரூபா 7,586,848 தொகை அதிகரித்தும் மூலதனச் செலவினம் ரூபா 10,809,583 தொகை அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தது. | மூலதன வருமானம் மற்றும் செலவினம் சரியாக சீராக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது இறுதிக் கணக்கில் சரி செய்யப்படும். |
| (viii) | உள்ளூராட்சி நிறுவனங்களின் கணக்கு வைத்தல் நடைமுறையின் பிரகாரம் நிலையான சொத்துக் கணக்கின் | வேறுபாடுகள் இனங்காணப்பட்டு உரிய சீராக்கம் மேற்கொள்ளப்பட | நீண்ட காலமதாக கொண்டுவரப்படுகின்ற வேறுபாடுகள் 2019 ஆம் ஆண்டின் |

| | | | |
|---|---|---|---|
| | மீதியும் மூலதன பங்களிப்புக்கான வருமானக் கணக்கின் மீதியும் சமமாக இருக்க வேண்டிய போதிலும் அந்த இரண்டு கணக்குகளுக்குமிடையே ரூபா 3,028,092 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | வேண்டும். | கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும். |
| (ix) | மீளாய்வாண்டிற்குறிய சம்பள மீளளப்பு ரூபா 2,999,425 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | மேலதிகமாக கிடைத்த சம்பள மீளளிப்பு சரியாக சீராக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (x) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரதான பேரேட்டின் பிரகாரம் திரண்ட நிதியக் கணக்கின் மீதி ரூபா 101,340 தொகை அதிகரித்தும் வேலைக் கடன்கொடுத்தோர் கணக்கின் மீதி ரூபா 241,918 தொகை குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்குகள் சரி செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும். |

(ஆ) இணக்கஞ்செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 305,858,758 தொகையான 07 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அவற்றிற்குரிய பட்டோலைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்குமிடையே ரூபா 3,624,071 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும். |

(இ) பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| | | | |
|---|---|---|---|
| (i) | 2010 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற வீதி விளக்கு பராமரிப்புக்காக கிடைக்க வேண்டிய ரூபா 1,545,121 தொகை அறவிடப்படவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மின்சார சபையின் எழுத்து மூல உறுதிப்படுத்தலின் மூலம் 2019 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 21 வருடம் முதல் 37 வருட காலம் வரை கொண்டுவரப்படுகின்ற ரூபா 88,103 தொகையான முற்பண மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | காலாவதியான முற்பணங்களைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 இன் இறுதிக் கணக்குகள் தயாரிப்பதற்கு முன் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

(ஈ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | | |
|---|---|---|
| 2017 இன் நிதிக் கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 2,131,115 கூட்டுப்பெறுமதியான இரண்டு உழவு இயந்திரங்கள், இழுவைப் பெட்டிகள் மற்றும் கழிவு வண்டி என்பன 2018 இன் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படாதிருந்ததுடன் அந்த சொத்துக்கள் அகற்றப்பட்டமைக்கோ அல்லது தற்போது அந்த சொத்துக்கள் காணப்படுகின்றமைக்கோ எவ்வித சான்றுகளும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | உரிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |

## 1.4 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134(1) ஆம் பிரிவு | | அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசமாக பிரதேச சபையினால் வெளியிடப்பட்ட அசைவுறாத ஆதனங்களின் ஆதன வரிக்காக புதிய கண்டுபிடிப்புக்கள் இடம்பெற்றிருக்கவில்லை. | ஆதன வரிக்காக புதிய இணங்காணல்கள் மேற்கொள்ளப்பட்டு அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆதனவரித் திருத்தம் மேற்கொண்டு 12 வருடங்கள் கடந்திருந்ததுடன் தற்போது வருமான பரிசோதகரால் தகவல்கள் கோரப்பட்டு 2021 ஆம் ஆண்டின் போது புதிய ஆதனவரி வலயத்திற்குரிய ஆதன வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | 131,364 | ஒவ்வொரு அரையாண்டின் இறுதியிலும் காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக பட்டியல் தயாரித்து அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்படவில்லை. | காலாவதியான வைப்புக்கள் தொடரடபாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க | தற்போது தேவையான நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் உரிய பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | வேண்டும். | |
| (இ) | 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க வர்த்தகமானி அறிவித்தல் | - | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் விநியோகிக்க வேண்டிய 29 நிறுவனங்களுக்காக அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படவில்லை. | நிறுவனங்களுக்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட வேண்டும். | பதவியணியின் குறையாடுகளினால் சுற்றாடல் அனுமதிப் பத்திரம் விநியோகம் தாமதமாகியிருந்தன. எதிர்காலத்தில் அந்த நடவடிக்கைகள் நாளதுவரையாக்கப்படும். |
| (ஈ) | தேசிய பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.9.1ஆம் பிரிவு | 2,669,728 | சமூக அடிப்படையிலான அமைப்புக்காக நேர் ஒப்பந்த முறையின் கீழ் ஒப்பந்தங்களைக் கையளிக்கும் போது அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமல் 05 ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டிருந்தன. | சமூக அடிப்படையிலான அமைப்புக்களுக்கு ஒப்பந்தங்களை கையளிக்கும் போது சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பிரதேச செயலாளரின் சிபாரிசின் அடிப்படையில் ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் கூறப்பட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 20,915,086 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,669,511 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 7,065,000 | 6,842,605 | 6,277,557 | 565,048 | 6,045,660 | 3,942,011 | 3,477,053 | 464,957 |
| (ii) | வாடகை | 910,000 | 956,340 | 896,040 | 60,300 | 775,870 | 846,162 | 813,662 | 32,500 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 275,000 | 238,750 | 238,750 | - | 190,000 | 152,800 | 151,800 | 1,000 |
| (iv) | ஏனைய வருமானம் | 39,146,000 | 40,711,661 | 37,831,570 | 2,880,090 | 29,717,500 | 14,654,056 | 11,462,879 | 3,191,177 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ஆதனவரி நிலுவை ரூபா 2,106,206 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 1,235,275 தொகை அதாவது 59 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை ஆதனவரி வருமானம் அறவிடப்பட வேண்டும். | நிலுவை ஆதனவரி அறவிடலில் முன்னேற்றம் ஒன்றை காண்பித்ததுடன் 05 வருமான பிரிவுகளில் 03 இற்கு மாத்திரம் வருமானம் சேகரித்தல் பிரச்சினைக்குரியதாக இருந்ததுடன் இந்த ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் நிலுவைப் பணத்தில் ஆகக் கூடிய தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | மீளாய்வாண்டில் ஒட்டுமொத்த ஆதனவரி அறவிடல் ரூபா 2,598,623 ஆக இருந்ததுடன் அது 59 சதவீதமாகும். ஆண்டின் இறுதியளவில் மேலும் அறவிட வேண்டிய ரூபா 1,794,324 தொகையான ஆதனவரி நிலுவையொன்று காணப்பட்டது. | நிலுவை ஆதனவரி வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | தற்போது மீண்டெழும் வருமான சேகரித்தல் திருப்திகரமாக உள்ளதுடன் கொடுப்பனவுனகள் புறக்கணிக்கப்பட்டமை யினால் நடப்பாண்டில் 24.5 சதவீதம் அறவிடுவதற்கு முடியாதிருந்தது. |
| (iii) | 2018 திசெம்பர் 31இல் உள்ளவாறு ஆதனவரி நிலுவையில் 01 – 03 வருடங்களுக்கிடையே 1184 அளகுகளுக்கான நிலுவை ரூபா 568,168 தொகையும், 04 – 10 வருடங்களுக்கிடையே 264 அலகுகளுக்கான நிலுவை ரூபா 386,740 தொகையும், 10 வருடங்களுக்கு மேற்பட்ட 526 அலகுகளுக்கான நிலுவை ரூபா 808,072 ஆகவும் இருந்தன. | நீண்ட காலமாக காணப்படுகின்ற நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு வருமானப் பரிசோதகர்களுக்கு இலக்கு வழங்கப்பட்டுள்ளது. |

### 2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) நீதிமன்றத் தண்டப்பணம் | | |
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 20,879,490 ஆக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 17,535,530 தொகை 03 வருடங்களுக்கு முன்பிருந்து காணப்படுகின்ற மீதியாகும். | இனங்கண்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | தற்போது பிழையாக சிட்டையிடல் நிறுத்தப்பட்டுள்ளது. |
| (ii) முத்திரைக் கட்டணம் | | |
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 5,596,585 ஆக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டதுடன் ஆண்டின் சிட்டையிடல் ரூபா 27,000,000 ஆக இருந்தது. சிட்டையிடப்பட்ட முத்திரைக் கட்டணத்தில் எந்தவொரு தொகையும் ஆண்டில் கிடைக்காதிருந்தமையால் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ஆகக் குறைந்தது ரூபா 27,000,000 ஆக இருக்கவேண்டும். | சிட்டையிடப்பட்ட முத்திரைக் கட்டணத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பட்டோலை பெறுவதில் உள்ள தாமதத்தினால் அறவிடல் தாமதமானதுடன் தற்போது பட்டோலையைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) செயல் நடவடிக்கைத் திட்டம் | | |
| சபையினால் 2018 ஆம் | பாதீட்டை | பதிலளிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட பாதீட்டில் ரூபா 88.48 மில்லியன் ஒதுக்கப்பட்ட போதிலும் வருடாந்த செயல் நடவடிககைத் திட்டத்தில் ரூபா 70.64 மில்லியன் நிதி ஏற்பாடு மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்தது. | அடிப்படையாகக் கொண்டு செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | |

(ஆ) நோக்கங்களுக்குப் புறம்பான செயற்பாடுகள்

---

| | | | |
|---|---|---|---|
| (i) | வருடாந்த பாதீட்டின் மூலம் வீதி மற்றும் பாலத்தின் கீழ் மூலதனச் செலவினத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 2.1 மில்லியன் தொகையான 04 செயற்திட்டங்கள் மாத்திரம் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அந்த செயற்திட்டங்களும் அமுல்படுத்தப்படவில்லை. | பாதீட்டு நிதி ஏற்பாடு செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு செயற்திட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும். | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பாதீடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த செயற்திட்டங்கள் ஆண்டின் போது அமுல்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த செயற்திட்டங்களுக்குப் புறம்பாக ரூபா 9.95 மில்லியன் தொகையில் மதிப்பீட்டுக் கிரயமான 17 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டில் அமுல்படுத்தப்பட்டிருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் அமுல்படுத்தப்படல் வேண்டும். | உறுப்பினரின் கோரிக்கையின் அடிப்படையில் செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டதுடன் அதற்காக குறை நிரப்பு மதிப்பீட்டு நிதி ஏற்பாடு பெறப்பட்டுள்ளது. |
| (iii) | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் எதிர்பார்த்த பூர்த்தி மட்டம் மற்றும் பெறுபேறுகளின் பிரகாரம் செயலாற்றல் மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் ரூபா 88.5 மில்லியன் தொகையான பாதீட்டு மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு செயல் நடவடிக்கைத் திட்டத்தில் செயற்பாடுகள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் அந்த செயற்பாடுகளின் செயலாற்றலை | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் செயலாற்றலை மதிப்பிடும் முறைமை ஒன்று காணப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரியான முறைமை ஒன்றை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

அளவிடும் முறைமை ஒன்று சபையிடம் காணப்படவில்லை.

(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

---

| | | |
|---|---|---|
| தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் 2017 யூலை 31 ஆந் திகதிய BD/CBP/4/1/2-2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கும் போது அந்த சுற்றறிக்கையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய கொள்கை உபாய வழிகள் தொடர்பாக சபை அறிந்திருக்காமையினால் அவை அமுல்படுத்தப்படவில்லை. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அமுல்படுத்துவது தொடர்பில் ஆர்வத்தைக் காண்பிக்கின்ற தரப்பினர் சரியாக இனங்காணப்படவில்லை. மேலும் நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைந்துகொள்வதற்காக சபையினால் 2018 ஆம் ஆண்டின் வருடாந்த பாதீட்டில் நிதிஏற்பாடு ஒதுக்கப்படாதிருந்ததுடன் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்கு, நோக்கங்களை இனங்கண்டு பாதீடு செய்யப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு அமுல்படுத்துதல் வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் போது பதவியணியினர் அறிந்திராதிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

---

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவி, ஒரு வேலைக் கள மேற்பார்வையாளர் பதவி, ஒரு கனரக இயந்திர செற்படுத்துனர் பதவி, இரண்டு பாதுகாவலர் பதவிகள் மற்றும் ஒரு சுகாதார தொழிலாளர் பதவி என்பவற்றை | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தொழில்நுட்ப உத்தியோகத்தரைச் சேர்ப்பதற்காக மாகாண அரச சேவை ஆணைக்குழுவிற்கு மும்மாத அறிக்கை சமர்ப்பிக்கப்படுகின்றது. வேலை/ கள |

| | | | |
|---|---|---|---|
| | நிரப்புவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | மேற்பார்வையாளர் பதவியின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு பிரதம செயலாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கனரக இயந்திர செற்படுத்துனருக்காக விண்ணப்பம் கோரப்பட்டிருந்த போதிலும் அதற்காக முன்வராதிருந்ததுடன் 02 பாதுகாவலர் மற்றும் சுகாதார தொழிலாளர் பதவிகளுக்காக நியமனம் வழங்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | சேவையை விட்டுச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து 06 மாதம் முதல் 07 வருடங்கள் வரையிலான காலஎல்லையில் காணப்பட்ட ரூபா 106,505 தொகையான கடன் மீதியை மீளாய்வாண்டில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைக் கடன் அறவிடப்பட வேண்டும். | கடன்பெற்ற இரண்டு உத்தியோகத்தர்கள் 10 வருடங்களுக்குக் குறைந்த சேவைக் காலத்தையுடைய உத்தியோகத்தர்களாக இருந்த போதிலும் பிணை வைப்பு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இதற்காக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | காணிகள் கூறுகளாக்கப்பட்டு விற்பனை செய்யும் போது அவ்வாறு ஏலவிற்பனை செய்யப்பட்ட காணிகளின் விற்பனைப் பெறுமதியின் அடிப்படையில் ஒரு சதவீத வரி அறவிடப்பட வேண்டிய போதிலும் ரூபா 2,838,782 தொகையான சேகரிக்கப்பட்ட வரித்தொகை சபையின் வருமானப் பரிசோதகரின் | வரித் தொகையை அறவிடும் போது காணிகளின் விற்பனைப் பெறுமதியின் அடிப்படையில் அறவிடப்பட வேண்டும். | ஏலவிற்பனைக் கம்பனி நிலக்கூறுகளின் பெறுமதியைப் பெற்றிருந்த போதிலும் அப்பெறுமதியின் அடிப்டையில் நடவடிக்கை எடுக்காமல் வருமானப் பரிசோதகரினால் பிரதேசத்தின் காணிகளின் |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பீட்டு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு அறவிடப்பட்டிருந்தது. | | மதிப்பீடொன்றைப் பெற்று அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | காணி ஏலவிற்பனை மூலம் 2000 ஆம் ஆண்டில் பொதுச் செயற்பாடுகளுக்காக கிடைத்த 03 றூட் 14 பேர்ச் அளவான காணியின் ஒரு பகுதியில் அனுமதியற்ற 02 நிரந்தர வீடுகள் காணப்பட்டதுடன் அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் தொடர்பாக சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் தொடர்பாக சபையினால் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பல வருட காலமாகக் குடியிருக்கின்றமையினால் களப் பரிசோதனையொன்று மேற்கொண்டு எதிர்காலத்தில் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தொடன்கொட பொதுச் சந்தையில் காணப்பட்ட வாடகைக்கு வழங்கப்பட்ட 17 கடைகள் உடன்படிக்கை செய்யப்பட்ட வியாபார நடவடிக்கைளுக்காக அனுமதி பெற்றிருந்த போதிலும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுத்தாமல் விளைவற்று மூடிவைக்கப்பட்டிருந்தது. | விளைவற்ற சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்தக் கட்டிடம் 30 வருடங்களுக்கு மேல் பழைமை ஆனமையால் அதில் வியாபார நடவடிக்கைகள் மேறகொள்ள முடியாதிருந்ததுடன் புதிய கட்டிடத்தொகுதியின் நிர்மாண நடவடிக்கைள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது |

### 3.5.2 சொத்துக்களிலிருந்து கிடைக்க வேண்டிய வருமானம் பெறப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டில் விற்றுத் தீர்க்கபட்ட 02 வாகனங்கள் மற்றும் கை உறுளை என்பன ஏலத்தில் விற்பனை செய்வதற்காக மதிப்பீட்டுப் பெறுமதியொன்று பெறப்பட்டிருந்த போதிலும் அந்த மதிப்பீட்டுப் | சொத்துகக்களின் மதிப்பீட்டுப் பெறுமதியை விட குறைவாக விற்பனை செய்யப்பட | உடைந்த நிலையில் காணப்படுகின்ற வாகனப் பகுதிகளுக்காக செய்திப் பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்த போதிலும் மதிப்பீட்டை விட |

| | | |
|---|---|---|
| பெறுமதியை விட குறைவான பெறுமதியில் அந்த வாகனங்கள் விற்பனை செய்யப்பட்மையால் சபைக்கு ரூபா 120,750 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. | முடியாது. | குறைவான கேள்விப் பணம் கிடைத்தமையால் மீண்டும் கேள்வி கோருவதற்கான காலம் மற்றும் செலவினங்களை செய்வதற்கு ஏற்பட்டமையால் ஆகக் கூடிய கேள்வி ஏற்றுக்கொளள்ப்பட்டுள்ளது. |

**3.6 இனங்காணப்பட்ட நட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இருப்புப் பேரேட்டு பரிசோதனையின் போது இருப்புப் பதிவேட்டின் மீதிக்கும் களஞ்சிய உத்தியோகத்தரிடம் கணப்பட் பௌதீக இருப்பு மீதிக்குமிடையே காணப்பட்ட பற்றாக்குறையினால் ரூபா 280,998 தொகையான நட்டமொன்று சபைக்கு ஏற்பட்டிருந்தது. | உரிய காலப்பகுதியில் சரியாக இருப்புக்களை விநியோகித்து இருப்புப் பதிடே நாளதுவரையாக்கப்பட வேண்டும். | குறித்த பிகாரம் இருப் பதிவேடு இருப்பு பதிவேடு நாளதுவகையாக்கப்படாமை தவிர பற்றாக் குறையொன்று காணப்படாதிருந்தமையை தெரிவிக்கின்றோம். களஞ்சியப் பதிவேடு தற்போது நாளதுவரையாகக்படுகின்றது. |

**3.7 ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிர்மாணிக்கப்பட்ட வீதிகளின் தரம் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அதற்காக கொங்கிரீட் வீதியின் தடிப்பம் மற்றும் கொள்ளவு சக்தி என்பன பரீட்சிக்கப்படாமல் கருணாரத்ன அவர்களின் வீட்டிற்கு அருகிலுள்ள வீதி அபிவிருத்தி செய்யப்பட்டு ரூபா 380,864 தொகை ஒப்பந்தகாரச் சங்கத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. | நிர்மாணங்களின் தரத்தை பாதுகாப்பதற்காக மேற்கூறப்பட்ட பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். | திலளிக்கப்படவில்லை. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வு அவதானிப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 செப்தெம்பர் 13 ஆந் திகதி நடைபெற்ற மாகாண கணக்குகள் செயற்குழுவினால் 2011 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையின் 2.4(அ), (ஊ) மற்றும் 2012 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையின் 2.1.1(அ) என்ற பந்திகள் தொடர்பாக வழங்கப்பட்டிருந்த கட்டளை 2019 மே 27 ஆந் திகதி வரையிலும் அமுல்படுத்தப்படவில்லை. | அரச கணக்குகள் செயற்குழுவின் கட்டளை அமுல்படுத்தப்பட வேண்டும். | 2011 ஆம் ஆண்டின் 2.4(அ) பந்தி 30 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக கொண்டுவரப்படுகின்ற முற்பணமாகும். கோவைகளை கண்டறிய முடியாதிருந்ததுடன் கூடியவரைவில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். 2.4(ஊ) பந்தி தொடர்பாக முன்னாள் தலைவருக்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன் உதவி உள்ளூராட்சி ஆணையாளரின் ஆலோசணையின் அடிப்படையில் எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கப்படும். 2012 ஆம் ஆண்டின் 2.1.1 பந்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சுற்றாடல் **அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் நடைமுறைகள் சபையினால் முறையாக** இனங்காணப்படாதிருந்ததுடன் முறையான மெய்மையாய்வை மேற்கொண்டு அனுமதிப்பத்திரம் வழங்க வேண்டிய நிறுவனங்கள் மற்றும் சுற்றாடலுக்கு சாதகமில்லாத கைத்தொழில்களை மூடிவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் நடைமுறைகள் முறைமைப்படுத்தப் பட வேண்டும். | பதவியணியினரின் பற்றாக்குறையின் காரணமாக இவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் உத்தியோகத்தர் ஒருவரைச் சேர்த்து நாளதுவரையாக்கப்படுகின்றது. |